தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (12.11.2025) சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற 23 வது ஆசிய மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் வெற்றி பெற்ற மாஸ்டர்ஸ் தடகள வீரர்கள் சந்தித்து குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் / சென்னை குடிநீர் வாரியத்தின் தலைவர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில் நேற்று (12.11.2025) சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் 352வது வாரியக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தா.கார்த்திகேயன், ஜெ.குமரகுருபரன், டி.ஜி.வினய், டாக்டர் ஜி.எஸ்.சமீரன் மற்றும் வாரிய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (S.I.R.) செய்யும் பணியை

பூத் வாரியாக BLA - 2, BDA, மற்றும் கழகத்தினர் இணைந்து வீடு வீடாக சென்று கண்காணிப்பீர்!

காஞ்சி வடக்கு மாவட்ட கழகத்தினருக்கு தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம்,நவ.13-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் (S.I.R.) செய்யும் பணியை பூத் வாரியாக BLA - 2, BDA, மற்றும் கழகத்தினர் இணைந்து வீடு வீடாக சென்று கண்காணிக்க வேண்டும் என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டில் S.I.R. - வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யும் பணிகள் கடந்த 4-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. அந்த வகையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும், அடங்கியுள்ள வாக்காளர்களுக்கு, வாக்குச்சாவடி அலுவலர் - B.L.O. வீடு வீடாகச் சென்று கணக்கீட்டுப் படிவத்தை வழங்கி வருகின்றனர்.

ஒவ்வொரு வாக்குச்சாவடிகளில் உள்ள வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடி அலுவலர் - B.L.O. வீடு வீடாகச் சென்று கணக்கீட்டுப் படிவத்தை வழங்கும் போது, அரசியல் கட்சிகளின் BLA - 2 உடன் சென்று ஒத்துழைப்பு தரலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தி உள்ள படி,

தி.மு.க. சார்பில் நியமனம் செய்யப்பட்டுள்ள நம்முடைய BLA - 2, உடன் சென்று ஒத்துழைப்பு தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மேலும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் B.L.O - வாக்குச்சாவடி அலுவலரால் அடையாளம் கண்டறிய முடியாத வாக்காளர்களை கண்டறிவதற்கும் உதவி செய்து, உரிய வாக்காளர்களுக்கு அவர்களின் கணக்கீட்டு படிவத்தை வழங்குவதற்கு உதவிட வேண்டும்.

மேலும், 2025 - ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் கணக்கீட்டுப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும், உறுதி செய்ய வேண்டும்.

அந்தந்த வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்கள் வழங்கிய பின்னர், அந்தந்த வாக்குச்சாவடிகளின் BLA - 2 மற்றும் BDA ஆகியோர் ஒவ்வொரு வீடாகச் சென்று, வாக்காளர்கள் கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

மேலும், அந்தந்த வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணக்கீட்டுப் படிவங்களை பூர்த்தி செய்த பின்னர், அக் கணக்கீட்டுப் படிவங்கள் அந்தந்த B.L.O - வாக்குச்சாவடி அலுவலர் வசம் ஒப்படைத்திடுவதிற்கும் BLA - 2 உறுதுணையாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு வாக்களர்களுக்கு வழங்கப்பட்ட கணக்கீட்டுப் படிவங்களை முறையாக பூர்த்தி செய்து B.L.O - வாக்குச்சாவடி அலுவலர் வசம் கண்டிப்பாக திருப்பி தந்தால் தான் அந்தந்த வாக்காளர்களின் பெயரும், அவர்களுடைய குடும்ப உறுப்பினர் பெயரும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெரும் என்பதை கழகத்தினர் அனைவரும் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

1.1.2026 அன்று 18 வயது நிரம்பியவர்களையும், 2025 வாக்காளர் பட்டியலில் இடம் பெறாதவர்களையும் BLA - 2 கண்டரிந்து, அவர்களுக்கு வாக்காளர் சேர்க்கும் படிவம் 6-யை பெற்றுத் தந்து, புதிய வாக்காளர்களை சேர்க்கும் பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்றும் மேலும், கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தப் நாளையொட்டி

“அன்னம் தரும் அமுதகரம்” 266 வது நாள்!

அம்பத்தூர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,நவ.13-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 266 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (12.11.2025), அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 80, புதூர் பேருந்து நிலையம் அருகில். 2) வட்டம் 81, அம்பத்தூர் OT, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி, தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர

மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்று பட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், பி.கே. மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி.நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில், நேற்று (12.11.2025) பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட இராஜா அண்ணாமலைபுரம், கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் தா.வேலு, துணை மேயர் மு.மகேஷ்குமார், எச்.ஆர். கௌஷிக், எஸ்.மதன்மோகன், ஆர்.துரைராஜ், கி. மதிவாணன், மோ.சரஸ்வதி, அ.ரேவதி, செல்வி அமிர்தா வர்ஷினி, இரா.கீதா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

துறைமுகம் – இராயபுரம்

சட்டமன்றத் தொகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, நவ.13-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் துறைமுகம் மற்றும் இராயபுரம் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட இராயபுரம் மண்டலத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேற்று (12.11.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வடசென்னை பகுதிகளில் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இராயபுரம் மண்டலம், வார்டு 57க்குட்பட்ட வால்டாக்ஸ் சாலை, வ.உ.சி. தெருவில் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் புதியதாக கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூட கட்டுமானப் பணியினை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி, பணியினை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் பி.கே. சேகர் பாபு, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வார்டு54க்குட்பட்ட வால்டாக்ஸ் சாலை, சென்னை உயர்நிலைப்பள்ளியில் ரூ.1.41 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறைக் கட்டடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணியினை விரைந்து முடித்து மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், அப்பள்ளியின் வகுப்பறை, சமையற்கூடம் ஆகிய பகுதிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுடன், மேயர் பார்வையிட்டு ஆய்வு செய்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவின் தரம் குறித்து சாப்பிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவினை தரமாகவும், சுவையாகவும் தயார் செய்து குறித்த நேரத்தில் மாணவர்களுக்கு உணவு வழங்கிட ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் சி.எம்.டி.ஏ. சார்பில் வால்டாக்ஸ் சாலை, அண்ணா பிள்ளை தெருவில் கட்டப்பட்டு வரும் “ஒருங்கிணைந்த வளாகத்திலுள்ள” புதிய சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணிகள் மற்றும் இராயபுரம் சட்டமன்றத் தொகுதி, மூலகொத்தளத்தில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணிகளை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் மேயர் ஆர். பிரியா செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து கல்வி மற்றும் மருத்துவத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். அதற்கிணங்க, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட ஒவ்வொரு பள்ளிக் கட்டடங்களையும் மேம்படுத்தும் பணிகள் தொடர்ந்து மாநகராட்சியின் சார்பாக, ஒவ்வொரு நிதிநிலையின் அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டு, பல்வேறு பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் மேம்படுத்தப்பட்டு, பள்ளிகளில் கல்வித் தரமும் உயர்த்தப்பட்டு வருகிறது.

நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மாநகராட்சிக்குட்பட்ட சமுதாய நலக்கூடங்களை மேம்படுத்திட பல்வேறு கோரிக்கைகளை அளித்தனர். அதனடிப்படையில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள ஒவ்வொரு சமுதாய நலக்கூடத்தையும் ஆய்வு செய்து, புதிய கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டது. தற்போது, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சமுதாய நலக்கூடத்தின் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இப்பணி நடைபெற்று வரும் பகுதி துறைமுகத்திற்குட்பட்ட பகுதியாகும். இதற்கு முன்பு இந்தப் பகுதியில் நாடகக் கொட்டாய் இருந்தது. முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் காலத்திலிருந்தே, இதற்கு முன்பும் பல்வேறு நாடகக் கலைஞர்கள் இந்தப் பகுதியில் நாடகக் கொட்டாய் அமைத்து நாடகங்களை நடத்தி வந்தனர்.

அந்த வகையில், இந்தப் பகுதியை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கண்டறிந்து, பல்வேறு சட்டப்போராட்டங்களை மேற்கொண்டு, இப்போது மாநகராட்சியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. மாநகராட்சியின் சார்பில் இந்தப் பகுதியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக சமுதாய நலக்கூடமானது தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டு வருகின்றன. தரைத்தளத்தில் கார், இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகன நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளது. முதலாவது தளத்தில் ஒரே சமயத்தில் 600 நபர்கள் அமர்ந்து உணவு சாப்பிடும் வகையில் உணவுக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது தளத்தில் மணப்பெண், மணமகன் மற்றும் உறவினர் தங்கும் வகையில் 8 அறைகளுடன் கூடிய திருமண மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவடையும்.

அதேபோல், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மிகப்பெரிய சமுதாய நலக்கூடம் கட்டும் பணியும் நடைபெற்று வருகின்றன. அந்த கட்டடமும் டிசம்பர் அல்லது ஜனவரி மாதத்திற்குள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்படும்.

இதுமட்டுமல்லாமல், சி.எம்.டி.ஏ. சார்பாக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, ரூ.180 கோடி மதிப்பீட்டில் சுமார் 16 சமுதாய நலக்கூடங்களின் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் முக்கியமாக வடசென்னைக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதால், வடசென்னைக்குட்பட்ட பகுதிகளில் 11 சமுதாய நலக்கூடப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவில் இந்த அனைத்து சமுதாய நலக்கூடங்களும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் குறித்து

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களுக்கென ஒரு சிறப்பு திட்டமாக உணவு வழங்கும் திட்டத்தை வருகின்ற நவம்பர் 15ஆம் தேதி தொடங்கி வைக்கவுள்ளார்கள்.

தூய்மைப் பணியாளர்களிடையே இந்தத் திட்டம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றுள்ளது. சுழற்சி முறையில் தூய்மைப் பணியாளர்கள் பணி மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு புத்துணர்வு அளிக்கும் வகையில் இன்றைக்கு அவர்களுக்காக தனித்துவமாக உணவு வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வரவிருக்கும் 15ஆம் தேதி நடைமுறைக்கு கொண்டுவர உள்ளார்கள்.

விக்டோரியா பொது அரங்கப் பணிகள் குறித்து

விக்டோரியா பொது அரங்கப் பணிகளில் சில சிறிய பணிகள் மட்டும் நிறைவு செய்ய வேண்டியுள்ளது. அவையும் கூடிய விரைவில் முடிவடைந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

நவம்பர் 16க்குப் பிறகு கனமழை பற்றிய முன்னெச்சரிக்கை

இந்த மாதம் வடகிழக்குப் பருவமழை குறைவாக இருந்தாலும், வரவிருக்கும் நாட்களில் சுமார் ஐந்து நாட்களுக்கு மழை பெய்யும் வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனை முன்னிட்டு, மாநகராட்சியின் சார்பாக அனைத்து முன்னெச்சரிக்கைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மழை வரும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, தேவையான அடுத்தடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மேயர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் திருமதி ஆர்.பிரியா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் ராஜன்பாபு, மண்டல அலுவலர் விஜய்பாபு, உள்ளாட்சி பிரதிநிதி முரளி, மாமன்ற உறுப்பினர் ராஜேஷ் ஜெயின் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

காஞ்சிபுரத்தில் ரூ.18 லட்சம் செலவில் காரிய மண்டபப் பணி!

சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

காஞ்சிபுரம், நவ. 13

காஞ்சிபுரம் மாநகராட்சி, 2-வது வார்டு, சர்வ தீர்த்த குளக்கரை அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2024-25 ன் கீழ் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள காரிய மண்டபத்திற்கு கட்டுமானப் பணியை நேற்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், 1-வது பகுதிக் கழக செயலாளர் கே. திலகர், மாநகராட்சி ஆணையாளர், 1-வது மண்டலக் குழு தலைவர் ஜி.சசிகலா, மாமன்ற உறுப்பினர்கள் விமலா சேகரன், வட்ட செயலாளர்கள் ஜி.செல்வம், எஸ்.செந்தில், சாகுல் அமீது, கழக நிர்வாகிகள் பி.எஸ்.குடியரசு, வி. பகவான், மகாதேவன், ரூபச்சந்திரன், கருணாகரன், பரத்குமார், ப.அண்ணாமலை, பால்ராஜ், ஜெ. அன்பழகன், பாபு, ஜெ. கௌதமன், கௌரி, கலைவாணன், எஸ். வரதராஜன், ஏ.கே. பாஷா, பிரேம்குமார், சந்துரு, வினோத், திவாகர், தீனா, மாநகராட்சி பொறியாளர், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்கட்டளை பேருந்து நிலையத்தில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு கழிவறை, குடிநீர்,பயணிகள் அமரும்இருக்கைகள்,போன்ற வசதிகளை மேம்படுத்துமாறும் பேருந்து நிலையத்தை சுற்றி சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள மாறும் மாநகராட்சி அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார் .